## குவைத் இனால் நிதியளிக்கப்பட்ட பாலங்களின் மீள்நிர்மாண மற்றும் புனரமைப்புச் செயற்திட்டம் - 2014

குவைத் இனால் நிதியளிக்கப்பட்ட பாலங்களின் புனர்நிர்மாண மற்றும் புனரமைப்புச் செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்திற்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 1995 மார்ச் 27 ஆந் திகதிய மற்றும் 2001 செப்தெம்பர் 03 ஆந் திகதிய 466 ஆம் இலக்க மற்றும் 627 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்ட அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் செயற்திட்டக் காலம்

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்திகளின் பிரயாணக் கிரயத்தை குறைத்தல் மற்றும் நாட்டின் பிராந்தியங்களிற்கும் தலைநகரங்களிற்கும் இடையிலான பிரயாண தூரத்தைக் குறைத்தல் என்பவற்றின் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டமானது நெருக்கமான மற்றும் நலிவான 32 பாலங்களின் புனரமைப்பு, மீள்நிர்மாணம் அல்லது மீளமைப்பு மற்றும் கெட்டம்பே – கன்னொருவ வீதியின் அகலமாக்கல் என்பவற்றின் ஊடாக வீதிப் பாதுகாப்பை முன்னேற்றுவதையும் இலக்காக கொண்டுள்ளது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 3,432 மில்லியனிற்கு சமமான குவைத் தினார் 10.12 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 1,728.2 மில்லியனிற்கு சமமான குவைத் தினார் 5.10 மில்லியன் அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியத்தினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 1995 மார்ச் 27 இல் தொடங்கியிருந்ததுடன் 1997 திசெம்பர் 31 இல் முடிவடையும் 33 மாதங்களிற்குள் பூர்த்தியாக்குவதற்கு பட்டியல்படுத்தப்பட்டது. இக்காலப்பகுதி 2014 திசெம்பர் 31 வரை 7 சந்தர்ப்பங்களில் மேலுமொரு 13 வருடங்களால் நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வுசெய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வுசெய்தல் என்பவற்றினையும் ˙கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கிணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன்வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து

உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்துசெல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்தகாலப்பகுதிக்கு முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றனஎன்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், (ஈ)

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள்மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

செயற்திட்டத்திற்காக பெறப்பட்ட அரசாங்க பங்களிப்பானது நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,600,000 ஆக காட்டப்பட்டிருந்ததுடன் அதனை ஒத்த மீதியானது 2014 இற்கான நெடுஞ்சாலைகள் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 10,507,508 ஆக காட்டப்பட்டிருந்தது .

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | குவைத் தினார் மில் | ரூபா. மில் | ரூபா. மில் | குவைத் தினார் மில். | ரூபா. மில் | குவைத் தினார் மில். | ரூபா. மில் |
| அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைத் நிதியம் | 5.10 | 1,728 | 37.50 | 0.081 | 37.44 | 3.60 | 1,623.75 |
| இலங்கை அரசாங்கம் | - | 1,704 | 10.60 | - | 10.50 | - | 1,669.31 |
| | 5.10 | 3,432 | 48.10 | 0.081 | 47.94 | 3.60 | 3293.06 |

**3.2 பௌதீக செயலாற்றல்**

32 பாலங்களின் மீள்நிர்மாண வேலைகள் மற்றும் கெட்டம்பே – கன்னொருவ வீதியினை அகலமாக்கல் மீளாய்வாண்டின்போது பூர்த்தியாக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், காலி – தெனியாய – மாதம்பே வீதியின் ஏனைய 03 பாலங்களானது 2014 திசெம்பர் இல் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் உபகரணங்களை நகர்த்துவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக 02 மாதங்களிற்கும் அதிகமான காலதாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

காலி – தெனியாய – மாதம்பே வீதியின் 03 பாலங்களின் நிர்மாணத்தின் 04 விடயங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விலைமனுக்களின் பெறுமதியானது 52.29 சதவீதம் தொடக்கம் 162.75 சதவீதம் வரையான வீச்செல்லையில் பொறியியலாளர்களின் மதிப்பீடுகளை விட அதிகமாக காணப்பட்டது. அதன் விளைவால், அப் பாலங்களின் நிர்மாணக் கிரயமானது ரூபா 4.45 மில்லியனால் அதிகரித்திருந்தது.